
நகர் ஊரமைப்பு துறை (DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்
ஊத்துக்குளி பேரூராட்சி

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், ஊத்துக்குளி பேரூராட்சி மற்றும் புஞ்சை ஊத்துக்குளி கிராமம் ரீ.ச.எண் – 183/1 B2B2A – ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு : 1:500 (1செ.மீ = 5.0மீ)
இணையதள விண்ணப்ப எண் : WXN7QFUL/2023 நாள் : 13/ 07/ 2023



குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு	: 1.72 ஏக்கர் (அ) 6964.00 ச.மீ
ஒதுக்கிய மனைகள்	: 24
மனைப்பிரிவின் எல்லை	
நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை	

பொது ஒதுக்கீடுகள் : (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

I. மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 2352.97 ச.மீ

II. பூங்கா

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : [மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு – மனைப்பிரிவு சாலையின் பரப்பு] X 10.0%
: (6964.00 – 2352.97) x 10% = 461.10 ச.மீ

ii) 461.10 ச.மீ பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்புதொகை ரூ. 746982.00 னை மனுதாரரால் உரிய அரசு கணக்கு தலைப்பில் 11.10.2023 அன்று செலுத்தப்பட்டது.

III. பொது உபயோகம்

A) LOCAL BODY– க்கு : (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு – மனைப்பிரிவு சாலையின் பரப்பு) X 0.50%
ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = (6964.00 – 2352.97) x 0.5/100 = 23.06ச.மீ
ஒதுக்கப்பட்ட பரப்பு : 42.56 ச.மீ(0.92%)

B) TANGEDCO– க்கு : (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு – மனைப்பிரிவு சாலையின் பரப்பு) X 0.50%
ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = (6964.00 – 2352.97) x 0.5/100 = 23.06ச.மீ
ஒதுக்கப்பட்ட பரப்பு : 32.49 ச.மீ(0.70%)

கட்டிட வரம்பு:
9.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ விடப்படல் வேண்டும்,
9.0 மீ முதல் 18.0 மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்
மூலை முடக்கு:
12.00 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்
12.00 மீ மேல் 30.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. அரசாணைஎண்:18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (ஆயு-1) நாள் : 04.02.2019(ம) அரசாணை எண் :16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020 - ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020- ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி மழைநீர் வடிகால் வசதிகள் மேல்நிலைத்தொட்டி குடிநீர் வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளை மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை ஊத்துக்குளி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், ஊத்துக்குளி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவைபல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வரைபடநகலோடு, நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் ∴ விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ ஓ1.2மீ என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரைய பத்திரம் குத்தகை பத்திரம் பட்டா தானப்பத்திரம் பொது அதிகாரப்பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலையாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

SWP/DTCP/TIRUPUR/LAYOUT NO : 273/2023

சா.ரிஸ்வான்
அளவர் / உதவி வரைவாளர்

இரா.வேலுசாமி
வரைவாளர் நிலை - I

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2025.06.18 19:46:18

Signature Not Verified
Signed by: Executive Officer
Location:Tiruppur
Date:2025.06.09 12:50:29

ரா.செபஸ்தி ரோசாலி
மேற்பார்வையாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.